Puducherry

Reg.Bulletin

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 27.12.2024 நேரம் மாலை 6.10 மணி

-------------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

மறைந்த முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் உடலுக்கு, குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மறைவையொட்டி 7 நாள் துக்கம் அனுசரிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

டாக்டர் மன்மோகன் சிங் மறைவுக்கு, புதுச்சேரி துணைநிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்திய வங்கிகள் தொடர்ந்து 6ஆவது ஆண்டாக லாபகரமாக செயல்பட்டு வருகின்றன என்று ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

மன்மோகன் சிங் 1 (18)

மறைந்த முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் உடலுக்கு, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் நேரில் அஞ்சலி செலுத்தினர். இதனையடுத்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள காணொலிப் பதிவில், தடைகள் பல கடந்து, வாழ்வில் மிகப்பெரிய உயரங்களை எட்டி, எதிர்கால தலைமுறைக்கான எடுத்துக்காட்டாக டாக்டர் மன்மோகன் சிங் திகழ்வதாக புகழஞ்சலி

செலுத்தி உள்ளார். மத்திய அமைச்சர்கள் திரு. அமித் ஷா, திரு. ஜே.பி நட்டா, திரு. ராஜ்நாத் சிங், திரு. ஜோதிராதித்ய சிந்தியா, காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, அக்கட்சியின் முன்னாள் தலைவர் திருமதி சோனியா காந்தி, திரு. ராகுல்காந்தி, ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளர் திரு. அரவிந்த கெஜ்ரிவால், ஆந்திர பிரதேச முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு, தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் பலரும், டாக்டர் மன்மோகன் சிங் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

மூச்சு திணறல் காரணமாக பாதிக்கப்பட்ட டாக்டர் மன்மோகன் சிங், டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கபட்டிருந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்றிரவு காலமானார். அவருக்கு வயது 92.

*மன்மோகன் சிங்* 2 (15)

முன்னதாக, அவரது மறைவையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள இரங்கல் செய்தியில், நாட்டில் பொருளாதார சீர்திருத்தத்திற்கு டாக்டர் மன்மோகன் சிங் பெரும் பங்காற்றி உள்ளதாக தெரிவித்தார். நாட்டிற்கு அவர் ஆற்றிய சேவைகள் என்றென்றும் நினைவு கூறப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் வெளியிட்டுள்ள செய்தியில், இந்திய பொருளாதார தாராளமயமாக்கலின் சிற்பியாக அவர் திகழ்ந்தார் என்றும், முக்கிய மாற்றத்தின் மூலம் நாட்டின் வளர்ச்சிக்கான புதிய வழிகளை கண்டறிந்தார் எனவும் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், எளிய குடும்பத்தில் பிறந்த டாக்டர் மன்மோகன் சிங், மதிக்கத்தக்க பொருளாதார நிபுணராக உயர்ந்தார் என்று தெரிவித்துள்ளார். அவரது நாடாளுமன்ற செயல்பாடுகள் நுண்ணறிவு மிக்கதாக இருந்தது என்றும்,

அவர் பிரதமராக இருந்தபோது மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த பெரும் முயற்சிகளை மேற்கொண்டார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

*மன்மோகன் சிங்* 3 (10)

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள செய்தியில், தொலை நோக்கு சிந்தனை கொண்ட பெரும் தலைவரை நாடு இழந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல்காந்தி வெளியிட்டுள்ள செய்தியில், டாக்டர் மன்மோகன் சிங்கின் எளிமையும், பொருளாதாரம் குறித்த ஆழமான புரிதலும், நாட்டின் முன்னேற்றத்திற்கு உத்வேகம் அளித்ததாக தெரிவித்துள்ளார்.

பிரதமர், நிதியமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர், தலைமை பொருளாதார ஆலோசகர் என பல்வேறு பதவிகளை அலங்கரித்த டாக்டர் மன்மோகன் சிங் குறித்த ஒரு செய்தித் தொகுப்பு......

(வாய்ஸ்)

*துக்கம் அனுசரிப்பு 1 (16)*

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மறைவையொட்டி 7 நாள் துக்கம் அனுசரிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. நாடு முழுவதும் அரசு நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்படுவதாகவும், தேசிய கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்படும் என்றும் மத்திய அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அன்னாரது இறுதிச் சடங்கு அரசு மரியாதையுடன் நடைபெறும் என்றும், அன்றைய தினம் அனைத்து மத்திய அரசு அலுவலகங்களுக்கு அரைநாள் விடுமுறை அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் காலமான டாக்டர் மன்மோகன் சிங்கின் உடல், டெல்லியில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலி செலுத்தும் வகையில் வைக்கப்பட்டுள்ளது. நாளை, அவரது உடல் டெல்லி காங்கிரஸ்

தலைமையகத்தில் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும் என அக்கட்சி தெரிவித்துள்ளது. காங்கிரஸ் கட்சியின் பொது செயலாளர் திரு. வேணுகோபால் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், அன்னாரது இறுதி ஊர்வலம் நாளைக் காலை 9.30 மணிக்கு டெல்லி காங்கிரஸ் தலைமையத்தில் இருந்து நடைபெறும் என தெரிவித்துள்ளார்.

*துக்கம் அனுசரிப்பு 2 (8)*

இதற்கிடையே, டாக்டர் மன்மோகன் சிங் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், மத்திய அமைச்சரவைக் கூட்டம் இன்று நடைபெற்றது. டாக்டர் மன்மோகன் சிங்கின் நினைவாக இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், 2 நிமிட மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. டாக்டர் மன்மோகன் சிங் பொது வாழ்க்கையில் தனது முத்திரையை பதித்துள்ளார் என்றும், 1991 முதல், 1996 வரை, இந்தியாவின் நிதியமைச்சராக பணியாற்றிய அவர், பொருளாதார சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியவர் என்றும் மத்திய அமைச்சரவை தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*வெளிநாட்டு தலைவர்கள் இரங்கல் (15)*

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மறைவுக்கு, வெளிநாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர். அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஆண்டனி ஃபிலிங்கன் வெளியிட்டுள்ள செய்தியில், இந்திய-அமெரிக்க உறவை கட்டமைத்ததில் அவரின் பங்கு அளப்பரியது என்று தெரிவித்துள்ளார். பிரேசில் அதிபர் திரு. லூலா டா சில்வா வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், இருநாடுகளுக்கும் இடையேயான உறவை மேம்படுத்தும் வகையில் அவருடன் இணைந்து பணியாற்றியதாகவும், உலகளாவிய வளர்ச்சி குறித்து அவருடன் பலமுறை விவாதித்ததாகவும் தெரிவித்துள்ளார். ஆப்கானிஸ்தான் முன்னாள் அதிபர் திரு. ஹமித் கர்சாய் வெளியிட்டுள்ள செய்தியில், டாக்டர் மன்மோகன் சிங், ஆப்கானிஸ்தான் நாட்டின் உற்ற நண்பராக விளங்கினார் என்று குறிப்பிட்டுள்ளார்.

மாலத்தீவு முன்னாள் அதிபர் திரு. முகமது நசீத், இந்தியாவுக்கான ரஷ்ய தூதர் திரு. டெனிஸ் அலிபோ உள்ளிட்ட உலகத் தலைவர்கள் பலரும் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளனர்.

*புதுச்சேரி இரங்கல்* 1 (17)

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மறைவுக்கு புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி மற்றும் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், நாட்டின் மிக உயரிய பதவிகளை அலங்கரித்து, அனைவராலும் போற்றப்பட்ட தலைவராக திகழ்ந்தார் என்றும், நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், வளர்ச்சிக்காகவும், நாடாளுமன்றத்திலும், வெளியிலும் அவர் மேற்கொண்ட செயல்பாடுகள், அரசியலை கடந்து இன்றளவும் அனைவராலும் பாராட்டப்படுகிறது என குறிப்பிட்டுள்ளார். பேராசிரியராக, பொருளாதார நிபுணராக, ரிசர்வ் வங்கியின் தலைவராக, பாரத பிரதமராக அவர் ஆற்றிய பணிகளை நாடு என்றென்றும் நினைவில் வைத்திருக்கும் எனவும் திரு. கைலாஷ்நாதன் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் திரு. ரங்கசாமி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், உலகம் போற்றும் பெருமைக்குரிய பொருளாதார வல்லுநராக விளங்கிய டாக்டர் மன்மோகன் சிங், இந்தியாவின் பொருளாதார மறுமலர்ச்சியின் சிற்பியாக திகழ்ந்தவர் என்று புகழாரம் சூட்டி உள்ளார்.

*புதுச்சேரி இரங்கல்* 2 (18)

சிறந்த நாடாளுமன்றவாதியாகவும் விளங்கிய அவர், இந்திய அரசியலில் கண்ணியம் மிக்க ஒரு தனித்துவமான தலைவராக திகழ்ந்தார் என்றும் குறிப்பிட்டுள்ளார். முன்னாள் முதலமைச்சர் திரு. நாராயணசாமி

வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், டாக்டர் மன்மோகன் சிங் சிறந்த பொருளாதார மேதையாக விளங்கியதோடு இந்தியாவை வல்லரசாக்கும் வகையில் பொருளாதார சீர்திருத்தத்தை அறிமுகம் செய்தவர் என்று தெரிவித்துள்ளார்.

டாக்டர் மன்மோகன் சிங் மறைவையொட்டி, புதுச்சேரி கடற்கரை சாலையில் உள்ள மேரி கட்டிட அரங்கில், அவரது திருவுருவப் படத்திற்கு அரசு சார்பில் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அன்னாரது திருவுருவப் படத்திற்கு சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம், பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், சட்டமன்ற உறுப்பினர் திரு. லட்சுமி காந்தன் ஆகியோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்கட்சித் தலைவருமான திரு. சிவா தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் திரு. அனிபால் கென்னடி மற்றும் அக்கட்சி பிரதிநிதிகள் டாக்டர் மன்மோகன் சிங் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

ஜெய்சங்கர் (9)

இந்திய-அமெரிக்க நாடுகளுக்கு இடையே இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலர் திரு. ஆண்டனி ஃபிளிங்கனை சந்தித்துப் பேசினார். இது குறித்து டாக்டர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் கடந்த 4 ஆண்டுகளில் இந்தியா மற்றும் அமெரிக்கா இடையேயான நட்புறவின் முன்னேற்றம் குறித்து அவருடன் விவாதித்ததாக தெரிவித்துள்ளார். இருநாடுகளுக்கு இடையேயான உறவு, நமது பரஸ்பர நலன்களுக்கும், உலகளாவிய நன்மைக்கும் வித்திடும் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

*புதுச்சேரி தேர்வு (15)*

புதுச்சேரி திட்டம் மற்றும் ஆராய்ச்சித் துறையில் ஆய்வாளர் பணியிடங்களுக்கான எழுத்து தேர்வு வரும் ஞாயிற்றுக்கிழமை 29ஆம் தேதி புதுச்சேரியில் 10 மையங்களிலும், அதே நாளில் தீயணைப்பு துறைக்கான நிலைய அதிகாரி பணியிடங்களுக்கான தேர்வும் 2 மையங்களில் நடைபெறவுள்ளது. தேர்வு எழுதுவோர், நுழைவுச் சீட்டில் அவர்களது பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தை உரிய இடத்தில் ஒட்டி கையொப்பமிட்டு எடுத்து வரவேண்டும் என்றும், ஆதார், வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம், பான்கார்டு, பாஸ்போர்ட் இவற்றில் ஏதாவது ஒன்றின் அசல் சான்றிதழை கட்டாயம் கொண்டு வரவேண்டும் எனவும் தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி திரு. பங்கஜ் குமார் ஜா தெரிவித்துள்ளார். தேர்வு எழுதுவோர் கருப்பு வண்ண பால்பாயிண்ட் பேனா, நுழைவுச் சீட்டு மற்றும் அசல் அடையாள அட்டை ஆகியவற்றை மட்டுமே தேர்வு மையத்திற்கு கொண்டுவர வேண்டும் என்றும் அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

*வானிலை (8)*

தெற்கு கேரள கடலோர பகுதிகள் மற்றும் அதனையொட்டிய தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, அடுத்த 2 நாட்களுக்கு தமிழகத்தில் ஒருசில இடங்களிலும் புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும், இடிமின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும்.அதிகாலை வேளையில் ஒருசில இடங்களில் லேசான பனிமூட்டம் நிலவும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*ரிசர்வ் வங்கி (7)*

இந்திய வங்கிகள் தொடர்ந்து 6ஆவது ஆண்டாக லாபகரமாக செயல்பட்டு வருகின்றன என்று ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்திய வங்கிகள்

வலுவான நிதி நிலைமையை கொண்டிருப்பதாகவும், கடன்கள் மற்றும் சேமிப்புகளின் நிலையான வளர்ச்சியை அடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வங்கிகளின் அசையா சொத்துகளின் மொத்த விகிதம் 2.7 சதவிகிதமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

மறைந்த முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் உடலுக்கு, குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மறைவையொட்டி 7 நாள் துக்கம் அனுசரிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

டாக்டர் மன்மோகன் சிங் மறைவுக்கு, புதுச்சேரி துணைநிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்திய வங்கிகள் தொடர்ந்து 6ஆவது ஆண்டாக லாபகரமாக செயல்பட்டு வருகின்றன என்று ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.